Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 4 of 1973) and the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 6 of 1973), as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

### (2) அவை அலுவல் குறித்து

MR. CHAIRMAN : I have to inform the House that the Legislative Council will meet on the 3rd April 1973 and again on 5th April 1973 to consider the Official Bills.

If any hon. Member has booked reservation in the Railways for journey tomorrow, he may cancel it and get reservation for travel on 5th night.

## 4. கவன ஈர்ப்பு

### விக் இந்தியா தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதும் பதட்ட நிலையும் குறித்து.

**திரு. காட்டூர் கோபால்:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் ஓர் அங்கமாகிய விக் இந்தியா தொழிற்சாலைக்கு முன்புறமும் உட்புறமும் தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளதும், 21—3—1973 ஆம் நாளன்று முற்பகலில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் ஒரு அங்கமாகிய விக் இந்தியா தொழிலாளர் சங்க உறுப்பினரும், கேண்டின் கமிட்டி உறுப்பினருமான திரு. பி. பத்தராயன் என்பவர் கடுமையாக வன் முறையால் தாக்கப்பட்டு கத்தியால் குத்தப்பட்டு படுகாயப் படுத்தப்பட்டுள்ளது அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து."

*** மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அம்பத்தூரில் உள்ள விக் இந்தியா தொழிற்சாலையில் 603 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இதில் இரண்டு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. இதில் அங்கீகாரம் பெற்றது (1) விக் இந்தியா தொழிலாளர் முன்னேற்ற சங்கம், தி.மு.க. வைத் தழுவியது. இச் சங்கத்தின் தலைவர் திரு. காட்டூர் கோபால், இதில் சேர்ந்த அங்கத்தினரின் எண்ணிக்கை சுமார் 400 பேர். (2) அங்கீகாரம் பெறாத குசேலரைத் தலைவராகக் கொண்ட (ஸி.ஐ.டி.யு) தொழிற் சங்கம் இருக்கிறது. இதில் சுமார் 100 பேர்கள் இருக்கின்றனர்.

*1973 ஏப்ரல் 2]* *[திரு. என். வி. நடராசன்]*

இக்கம்பெனியில் காட்டூர் கோபால் தலைமையில் உள்ள சங்கத்தினர் கடந்த மாதம் முதல் தேதி தங்களுக்கு மத்திய அரசு தொழிலாளர் சம்பள விகிதத்தில் ஊதியம் கொடுக்க வேண்டுமென்று சம்பளம் வாங்க மறுத்து விட்டனர். ஆனால் குசேலர் தொழிற்சங்கத் தொழிலாளர்கள் சிலர் மாத ஊதியம் பெற்றுக் கொண்டனர். இதிலிருந்து இரு சங்கத் தொழிலாளர்களுக்கும் பேச்சு வார்த்தையில் தகராறு இருந்தது.

21—3—1973-ம் தேதி காலை சுமார் 8-30 மணிக்கு பத்தராயன் என்னும் தி.மு.க. தொழிலாளர் வேலைக்கு வரும்போது கம்பெனி கேட்டுக்கு வெளியே குசேலர் (ஸி.ஐ.டி.யு.) சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் (1) தங்கம், (2) தஷ்யாணி, (3) தாஸ், (4) முனுசாமி இவர்கள் நின்றுகொண்டு பத்தராயனைத் திட்டிவிட்டு தாங்கள் பகல் 1 மணிக்கு வந்து பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டனர். பகல் 1-20 மணிக்கு (1) முனுசாமி, (2) ஹுயிஸ், (3) பால், (4) சம்பத், (5) சேகர், (6) தாஸ், (7) நாராயணன், (8) சந்தானம், (9) குட்டி, (10) பாலன், (11) வெங்கடேசன், (12) குட்டப்பன் ஆகிய இவர்கள் கம்பெனி வாயிலில் புகுந்து மேற்படி பத்தராயனை அடித்தார்கள், முனுசாமி கத்தியினால் பத்தராயனின் வலது கையில் குத்தினான், மற்றவர்களும் கையால் அடித்தார்கள், காலாலும் உதைத்தார்கள், என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

மேற்படி சம்பவம் நடக்கும்போது கம்பெனிக்கு எதிரில் உள்ள அத்திப்பேடு என்னும் கிராமத்தில் உள்ள பொது ஜனங்கள் சுமார் 50 பேர்கள் ஓடிவந்து முனுசாமியைச் சேர்ந்தவர்களை அடித்துத் துரத்தினர். கல்லாலும் கட்டையாலும் அடித்துத் துரத்தியதில் முனுசாமி தோழர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

மேற்படி கலவரம் நடந்தது அறிந்து தொழிற்பேட்டை காவல் நிலையத்தினர் விரைந்து சென்று, மேற்படி எதிரிகளில் கிடைத்த ஆறு பேர்களைக் காவல் நிலையம் கொண்டு வந்தனர்.

பத்தராயன் கொடுத்த புகாரின் பேரில் தொழிற்பேட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 76/73-ல் இ.பி.கோ. 147, 148, 448, 324 பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கும், முனுசாமி தோழர்களைச் சேர்ந்தவர்களில் சம்பத் என்பவன் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண். 77/73-ல் இ.பி.கோ. 147, 148, 324 பிரிவுகளின் கீழ் மற்றொரு வழக்கும், பதிவு செய்யப்பட்டன.

இக்கலவரத்தில் முதலில் வன்முறைக்கு இறங்கியவர்கள் (சி.ஐ.டி.யு.) யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள்தான் என்று இதுவரை நடத்தப்பட்ட விசாரணையிலிருந்து தெரிய வருகிறது. குற்ற எண். 76/73-ல் இது வரை 5 பேர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டு இருக்கிறார்கள். வழக்கு மேற்

கொண்டு விசாரணையில் உள்ளது. குற்ற எண். 77/73-ல் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த வழக்கும் மேற்கொண்டு விசாரணையிலுள்ளது. தொழிற்சாலை பக்கத்திலும், கிராமத்திலும் போலீஸ் பாதுகாப்பு செய்யப்பட்டு, இப்போது அமைதி நிலவுகிறது. மேற்கொண்டு யாதொரு விதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை.

திரு. காட்டூர் கோபால் : இந்தத் தொழிற்சாலையில் 500 பெண்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். பெண் தொழிலாளர்கள் பணியாற்றுகிற தொழிற்சாலைக்குள்ளேயே புகுந்து தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையைச் சார்ந்தவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டிலிருந்து இதுவரையில் பல்வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்த முன்னேற்றச் சங்கப் பேரவையைச் சார்ந்தவர்கள் இப்படியே தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிற காரணத்தால் இது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இந்த வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிறது. இதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

### 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

#### (1) 1973-ஆம் ஆண்டு சிறுவழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1973)

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, I beg to move—

"That the Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill 1973 @ (L.A. Bill No. 4 of 1973), as passed by the Assembly, be taken into consideration".

Section 72-B of the Presidency Small Cause Courts Act, 1882, as amended by Tamil Nadu Act XII of 1955, provides for the payment of Court-fee at the rate of one-half of the fee payable on the plaint in a suit for similar relief, on applications for new trial filed under section 38 of the said Act. There is no provision in the Act for exempting the applications filed by pauper applicants under section 38 of the said Act from payment of the Court-fee.

---

@ 126-127-ஆம் பக்கங்களில் இணைப்பு -ஆக அச்சிடப்பட்டுள்ளது.